# மாபெரும் அழைப்பு

## (தாவீதின் அழைப்பு)

### காட்சி - 1

இடம்: சாமுவேல் வீடு
பங்கேற்போர்: ஆண்டவர், சாமுவேல்

**ஆண்டவர்** : சாமுவேல்! சாமுவேல்!

**சாமுவேல்** : இதோ அடியேன்! கூறுங்கள் தலைவரே! (கைகள் கட்டி சிரம் தாழ்த்திய படி)

**ஆண்டவர்** : இஸ்ரயேலின் அரசராகச் சவுல் இல்லாதவாறு நான் புறக்கணித்தவனை எண்ணி நீ எவ்வளவு காலம் துக்கம் கொண்டாடுவாய்?

**சாமுவேல்** : (தலையை குனிந்தபடி நிற்றல்)

**ஆண்டவர்** : நான் உன்னிடம்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். மௌனம் சாதிக்கிறாயே ஏன்?

**சாமுவேல்** : தலைவரே! நான் என்ன செய்ய வேண்டும்? என்று மட்டும் சொல்லுங்கள். தங்களது கட்டளையை ஏற்று அடியேன் பணி செய்வேன்.

**ஆண்டவர்** : அப்படி கேள். உன்னிடமுள்ள கொம்பை எண்ணெயில் நிரப்பிக் கொண்டு போ.

**சாமுவேல்** : எங்கு கொண்டு போக வேண்டும்? தலைவரே!

**ஆண்டவர்** : சொல்லி முடிப்பதற்குள் ஏன் முந்திக் கொள்கிறாய்? நான் சொல்வதைப் பொறுமையுடன் கேள்.

**சாமுவேல்** : ஆகட்டும் தலைவரே!

**ஆண்டவர்** : பெத்லகேமைச் சார்ந்த ஈசாயிடம் நீ செல்ல வேண்டும்.

**சாமுவேல்** : (அதிர்ச்சியுடன்) ஈசாயிடமா!

**ஆண்டவர்** : ஆம்! ஈசாயிடம் தான்!

**சாமுவேல்** : தலைவரே! நான் அங்கு எப்படி போவேன்? சவுல் கேள்விப் பட்டால் என்னைக் கொன்று விடுவான்.

**ஆண்டவர்** : நீ அஞ்ச வேண்டாம். நான் ஈசாயின் புதல்வருள் ஒருவனைத் தான் அரசனாகத் தேர்ந்துள்ளேன்.

**சாமுவேல்** : அப்படியா, ஆண்டவரே! அது சரி, நான் அங்கு போய் என்ன செய்ய வேண்டும்.

**ஆண்டவர் :** (சற்று சினங் கொண்டவராய்) கிளிப்பிள்ளைக்குச் சொல்வதைப் போல்லலவா, உனக்குச் சொல்ல வேண்டிருக்கிறது.

**சாமுவேல் :** தலைவரே! உம் ஊழியன் என்னைப் பற்றி உமக்குத் தானே தெரியும்.

**ஆண்டவர் :** சரி! சரி! ஒத்துக் கொண்டால் சரிதான் நான் சொல்வதைக் கவனமுடன் கேள்.

**சாமுவேல் :** ஆகட்டும். தலைவரே!

**ஆண்டவர் :** நீ ஒரு கன்றுக் குட்டியை எடுத்துக் கொள்.

**சாமுவேல் :** கன்றுக்குட்டியையா? அது எதற்கு தலைவரே!

**ஆண்டவர் :** உன்னால் பெரும் ரோதனையாச் போச்சு நான் சொல்வதைக் கேள்.

**சாமுவேல் :** (கைகள் கட்டியபடி) சரி, தலைவரே!

**ஆண்டவர் :** கன்றுக்குட்டியை எடு.

**சாமுவேல் :** எடுத்து. . .

**ஆண்டவர் :** மீண்டும் அப்படித்தானே முந்திக் கொள்கிறாய்.

**சாமுவேல் :** (வாயில் கைவைத்தபடி) இனிமேல் வாய் திறக்கவே மாட்டேன்.

**ஆண்டவர் :** எடுத்துச் செல்லும் கன்றுக்குட்டியை ஆண்டவருக்குப் பலியிட வந்துள்ளேன் என்று கேள்.

**சாமுவேல் :** அப்புறம். . .

**ஆண்டவர் :** அப்புறமா! அப்புறம் ஈசாயை பலிக்கு அழைப்பதுபோல் அழைக்க வேண்டும்.

**சாமுவேல் :** அழைத்து. . .

**ஆண்டவர் :** அழைத்து. நான் உனக்குச் சொல்வதை செய்.

**சாமுவேல் :** அப்படி என்னதை சொல்லுவீங்க? இப்பவே சொல்லிட வேண்டியதுதானே. . .

**ஆண்டவர் :** (சற்று சினங் கொண்டு) நான் சொல்வதை செய்.

**சாமுவேல் :** கொஞ்சம் தெரிஞ்சுக்கொள்ளலாம் என்று நினைத்தேன். . . (என இழுத்தல்)

**ஆண்டவர் :** நீ ஈசாயுடன் இருக்கும் போது நான் ஒருவனை உனக்குக் காட்டுவேன்.

**சாமுவேல் :** அவனை நான் என்ன செய்ய வேண்டும்?

**ஆண்டவர் :** அவனை நீ எனக்காகத் திருப்பொழிவு செய்ய வேண்டும்.

**சாமுவேல் :** அப்படியே செய்கிறேன்.

## காட்சி - 2

(சாமுவேல், பெரியவர்கள், ஆண்டவரின் குரல், ஈசாய், அவரது புதல்கள் 7 பேர்)
(சாமுவேல் பெத்லகேமுக்கு வருதல்)

**பெரியவர்கள்:** (அஞ்சி நடுங்கியவாறு) வருக! வருக!

**சாமுவேல் :** நன்றி, நன்றி! உங்களைக் காண்பதில் மிக்க மகிழ்ச்சி.

**பெரியவர்கள்:** உங்கள் வருகையின் நோக்கம் சமாதானம் தானே!

**சாமுவேல் :** ஆம். வேறென்னவாக இருக்க முடியும்?

**பெரியவர்கள்:** எங்களது எதிர்பார்ப்பும் அதுவே. . .

**சாமுவேல் :** நான் ஆண்டவருக்குப் பலி செலுத்த வேண்டும். உங்களை தூய்மையாக்கிக் கொண்டு என்னுடன் வாருங்கள்.

**பெரியவர்கள்:** இதோ! இன்னும் சற்று நேரத்தில் தயாராகி விடுவோம். (செல்லுதல்)

**சாமுவேல் :** (ஈசாவை பார்த்து)
நீங்களும் உங்கள் புதல்வர்களும் பலியிட வரலாமே.

**ஈசாய் :** அதற்கென்ன? நாங்களும் வருகிறோம்.

## காட்சி - 3

பாத்திரங்கள்: சாமுவேல், ஈசாய் (பலியிட செல்லுதல்)

**சாமுவேல் :** (அமர்ந்தபடி)
(எலியாவைப் பார்த்து மனத்திற்குள் சொல்லுதல்)
ஆண்டவரால் திருப்பொழிவு செய்யப்பட்டவன் இவன் தானோ!

**ஆ. குரல் :** சாமுவேல்! அவன் தோற்றத்தையும், உயரத்தையும் பார்க்காதே; என்னால் புறக்கணிக்கப்பட்டவன் அவன். நான் மனிதனின் முகத்தை விட, அவனது அகத்தைக் காண்பவன்.

**சாமுவேல் :** (மௌனத்தோடு அமர்ந்த வண்ணகம் அவரைக் கடந்து செல்லும் ஈசாயின் புதல்களையும் பார்த்துக் கொண்டிருக்கிறார். ஒருவர் பின் ஒருவராக சாமுவேலை வணங்கியபடி கடந்து செய்கின்றனர்).
ஈசா, உன் பிள்ளைகள் இத்தனை பேர்தானா?

**ஈசாய் :** இல்லை, இல்லை. இன்னொருவன் இருக்கிறான்.

**சாமுவேல் :** அவன் எங்கே? அவனைக் கூப்பிடு.

**ஈசாய் :** அவன் ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கிறான்.

**சாமுவேல் :** அவனை உடனே, ஆளனுப்பி அழைத்து வாருங்கள்.

**ஈசாய் :** கொஞ்ச நேரத்தில் வந்து விடுவான். அதற்குள்ளாக நீங்கள் உணவருந்துங்களேன்.

**சாமுவேல் :** அவன் வரும் வரை நான் உணவருந்தவே மாட்டேன்.

## காட்சி - 4

பாத்திரங்கள்: சாமுவேல், ஈசாய், தாவீது)
(சாமுவேல் அமர்ந்திருத்தல், ஈசாய் தனது மகன் தாவீதுடன் உள்ளே நுழைதல்)

**தாவீது :** (தலை வணங்குதல்)

**சாமுவேல் :** இவன் தான் உம்முடைய இளைய மகனா?

**ஈசாய் :** ஆம். இவன் தான்.

**ஆ. குரல்** : சாமுவேல்! நான் தேர்ந்தெடுத்தவன் இவன் தான்! எழுந்து இவனைத் திருப்பொழிவு செய்!

**சாமுவேல்** : (எழுந்து, எண்ணெய் நிறைந்த கொம்பை எடுத்து தாவீதை திருப்பொழிவு செய்தல்).

**தாவீது** : (சாமுவேலின் காலில் விழுந்து வணங்குதல்)

## காட்சி - 5

இடம்: சவுலின் அரண்மனை (சவுல், பணியாளர்கள்)

**சவுல்** : ஐயோ! என் மனம் கலக்கமடைகிறதே! ஏன் என்ற தெரிய வில்லையே! (கத்தியபடி அங்குமிங்குமாக நடத்தல்)

**பணியாளர்** : ஐயா! ஆண்டவர் அனுப்பிய தீய ஆவி உம்மை கலக்க முறச் செய்கிறது என நான் நினைக்கிறேன்.

**சவுல்** : ஆமாம். அதுதான். என்னைக் கலக்கமடைய செய்கிறது. நான் என்ன செய்வது என்று தெரியவில்லையே.

(கூறிய படி பொருள்களை அங்குமிங்கு தூக்கி எறிதல், தட்டி விடுதல்)

**பணியாளர்** : ஐயா! எங்களுக்கு கட்டளையிடும்! யாழ் மீட்டுவதில் வல்லவன் ஒருவனை அழைத்து வருகிறோம்.

**சவுல்** : அவனை அழைத்து வந்தால் அப்படி என்ன விந்தை நடக்கும்?

**பணியாளர்** : ஐயா! அவன் யாழினை மீட்டும் பொழுது யாழின் ஓசையினால் உம்மீது இறங்கிய தீய ஆவி உம்மை விட்டு அகலும். நீரும் நலமடைவீர்!

**சவுல்** : என்னது? யாழின் ஓசையினால் தீய ஆவி நீங்குமா?

**பணியாளர்** : ஆம், ஐயா!

**சவுல்** : என்னை விந்தை! அப்படியானால் அவனை அழைத்து வாருங்கள்.

**பணியாளர்** : இதோ! இப்பொழுதே புறப்படுகிறேன்!

**சவுல்** : ஆமாம்! அப்படி யாழ் மீட்டுவதில் வல்லவன் யார் இருக்கிறார்கள்?

**பணியாளர்** : யாழ் மீட்டுவதில் மட்டுமல்ல ஐயா, வீரமும், போர்த்திறனும், பேச்சுத்திறனும் அவனிடம் நிரம்பி வழியக் கூடியவன். அத்தோடு அழகுள்ளவன் ஆண்டவனை தன்னோடு வைத்திருப்பவன்.

**சவுல்** : (விழிகளை உயர்த்திபடி) அப்படியா! அத்தனை பெருமைக்-குரியவனா! உடனே அழைத்து வர தூதுவர்களை அனுப்புங்கள் (செல்லுதல்)

## காட்சி - 6

இடம்: ஈசாயின் இல்லம்; பங்கேற்போர்: ஈசா, பணியாளர், தாவீது

**பணியாளர்** : யார் உள்ளே? (கதவைத் தட்டுதல்)

**ஈசாய்** : (வெளியே வருதல்) என்ன வேண்டும்? யார் நீங்கள்?

**பணியாளர்** : நாங்கள் சவுலின் பணியாளர்கள். உமது மகன் தாவீதை எங்கள் மன்னர் அழைத்து வர ஆணையிட்டுள்ளார்?

**ஈசாய்** : அப்படியா! இதோ, வருகிறோம்.
(வீட்டிற்குள் சென்று மூட்டையுடன் வருதல்)
மகனே! தாவீது, வா போகலாம். மன்னர் அழைத்துள்ளார்.

(இருவரும் மூட்டையுடன் கழுதையின்மீது அமர்தல்)

## காட்சி - 7

(சவுலின் அரண்மனை)

**சவுல்** : (இருக்கையில் அமர்ந்தபடி)

**பணியாளர்** : (தலை வணங்கியபின்) ஐயா! இதோ யாழ் மீட்டுவதில் வல்லவனான இவனை அழைத்து வந்துள்ளோம்.

**சவுல்** : பணியாளர்களே! இன்று முதல் இவன் தான் எனது படைக் கலனைத் தாங்குவான். எனவே, இவன் என் அவையிலேயே இருக்கட்டும்.

**பணியாளர்** : அப்படியே நடக்கட்டும்.

**சவுல்** : ஈசா, தாவீதுக்கு, என் கண்களில் தயவு கிடைத்துள்ளது. எனவே, அவன் இங்கேயே இருக்கட்டும் நீ போகலாம்.

**ஈசாய்** : சரி, மன்னா.

**பின்குரல்:** ஆம், “யாக்கோபுக்கு அன்றோ நான் அன்பு காட்டினேன். ஆனால் எசாயாவை வெறுத்தேன்” என்பது மறைநூல் வாக்கு. கடவுள் மனிதரைத் தேர்ந்தெடுத்துத் தம் திட்டத்தை நிறைவேற்றுகிறார் என்பது உண்மை. அத்திட்டமானது மனிதர் செய்யும் செயல்களின்படியன்றி, அழைக்கும் கடவுளுடைய செயலின்படியே நிறைவேறுகிறது என்பது இந்நாடகத்தின் மூலம் கிடைத்த தெளிவு.

**ஜா. மரிய ரோஸ்லின்**
*தூத்துக்குடி மறைமாவட்டம்*

